இறைத்தூதன்
கத்தோலிக்க வார இதழ்

பேதுருவும் படகிலிருந்து இறங்கி, இயேசுவை நோக்கிக் கடல்மீது நடந்து சென்றார். அப்பொழுது பெருங்காற்று வீசியதைக் கண்டு அஞ்சி அவர் மூழ்கும்போது, "ஆண்டவரே, என்னைக் காப்பாற்றும்" என்று கத்தினார். இயேசு உடனே தம் கையை நீட்டி அவரைப் பிடித்து, "நம்பிக்கை குன்றியவனே, ஏன் ஐயம் கொண்டாய்?" என்றார். அவர்கள் படகில் ஏறியதும் காற்று அடங்கியது. படகில் இருந்தோர் இயேசுவைப் பணிந்து, "உண்மையாகவே நீர் இறைமகன்" என்றனர். (மத் 14: 29-33)

# இளையோரே, கடவுளின் இதயம் உங்களுக்காகத் துடிக்கிறது!

## இளையோர் தினக் கொண்டாட்டத்தில் திருத்தந்தை அறிவுறுத்து

**போர்ச்சுக்கல்:** போர்ச்சுக்கலில் நடந்த திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் அதிகாரப் பூர்வ உலக இளையோர் தின நிகழ்வில், கூட்டத்தில் இருந்த 500,000 இளைஞர்களிடம், 'இளையோரே நீங்கள் இங்கே கூடியிருப்பது தற்செயலான ஒன்றல்ல. மாறாக, உங்கள் ஒவ்வொரு வரையும் கடவுள் பெயர் சொல்லி அழைத்துள்ளார். உங்களுக்காகக் கடவுளின் இதயம் துடிக்கிறது.' என்று பெருமிதம் கொண்டார் திருத்தந்தை.

"கடவுளின் பார்வையில், நாம் அனைவரும் விலைமதிப்பற்ற குழந்தைகள். அவர் நம்மை அரவணைத்து ஊக்குவிப்பதற்காக ஒவ்வொரு நாளும் நம்மை அழைக்கிறார். நம்மை ஒரு தனித்துவமான மற்றும் தலைசிறந்தப் படைப்பாக மாற்ற ஆவல் கொண்டுள்ளார். அதன் அழகை நாம் மட்டுமே பார்க்க இயலும் என்று மேலும் கூறினார்.

"அன்புள்ள இளையோரே, இந்த உலக இளையோர் தினத்தில், கடவுளின் அழைப் பைக் கண்டுணர ஒருவருக்கொருவர் உதவுவோம்; நீங்கள் இங்கே செலவிட்ட இந்த நாள்கள் கடவுளின் அந்த அன்பான அழைப்பின் துடிப்பான எதிரொலிகளாக இருக்கட்டும்.

"திருஅவையில் அனைவருக்கும், இடம் உள்ளது. இதில் யாரும் மிதமிஞ்சியவர்கள் இல்லை, யாரும் எஞ்சியிருக்க மாட்டார்கள், நம்மைப் போலவே அனைவருக்கும் இடம் இங்கே இருக்கிறது, "என்று அவர் கூறினார். ஆண்டவர் தம் விரலைக் காட்டாமல் தம் கரங்களைத் திறந்து, நம் அனைவரையும்



உலகெங்குமிருந்து லிஸ்பனில் கூடிய இளையோரின் ஒரு பகுதியினர்.

அரவணைத்துச் செல்கிறார். இயேசு நமக்காகச் சிலுவையில் அறையப்படுவ தற்கும் மரிப்பதற்கும் தம் கைகளை அகல விரித்தவர். இயேசு ஒருபோதும் அவரது உள்ளக் கதவை மூடுவதில்லை, ஆனால் அதனுள் நுழைய உங்களை அழைக்கிறார்; இயேசு வரவேற்கிறார். வாருங்கள், அவரில் வாழுங்கள்."இளையோரே, இதைப் பற்றி நம் இதயத்தில் கொஞ்சம் சிந்திப்போம். நாம் எந்நிலையில் இருக்கிறோமோ அந்நிலையில் அழைக்கப் படுகிறோம் - நம்மிடம் உள்ள பிரச்சனை கள், நம்மிடம் உள்ள வரையறைகள், நிரம்பி வழியும் மகிழ்ச்சி, சிறப்பாக இருக்க வேண்டும் என்ற ஆசை, வெற்றி பெற வேண்டும் என்ற எண்ணம் ஆகியவற்றுடன் நாம் இருப்பது போல் அழைக்கப் படுகிறோம். இதை பற்றி சிந்திக்க. இயேசு நம்மை அழைக்கிறார். நான் எப்படி இருக்க விரும்புகிறேனோ அப்படி அல்ல. நாம் இயேசுவின் சகோதர சகோதரிகள், ஒரே தந்தையின் பிள்ளைகளாக அழைக்கிறார்.

நிறைவாக, "நம்மை அழைத்த மற்றும் இந்த உலகப் பேரணியை சாத்தியமாக்க உழைத்த அனைவருக்கும் நன்றி கூறுவோம். எல்லாவற்றிற்கும் மேலாக, நம்மை அழைத்தவர் இயேசு. மற்றொரு உரத்த கரவொலியுடன் இயேசுவுக்கு நன்றி கூறுவோம்!" என்று திருத்தந்தை தம் உரையை நிறைவுச் செய்தார்.

தனது 42ஆவது வெளிநாட்டுத் திருப் பயணமாக போர்த்துக்கல் சென்று, இளையோர் தினக் கொண்டாட்டங்களில் கலந்துகொண்ட திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், உலகம் முழுவதும் இருந்து வந்து, விசுவாசக் கொண்டாட்டத்தில் லிஸ்பனில் கலந்துகொண்ட இளையோருடன் தனது கருத்துக்களைப் பகிர்ந்துகொண்டதோடு, பாத்திமா நகரில் நோயுற்றோருடன் தன் நெருக்கத்தை வெளிப்படுத்தி, உலக அமைதிக்கான தன் அர்ப்பணத்தையும் வெளிப்படுத்தினார்.

## அலோர் காஜா புனித அன்னம்மாள் சிற்றாலய திருவிழா

மலாக்கா: அலோர் காஜாவில் புகழ் பெற்ற புனித அன்னம்மாள் சிற்றாலய ஆண்டு திருவிழா வழக்கம் போல வெகு விமரிசையுடன் கடந்த ஜூலை மாதம் 23ம் தேதி மாலை 4.30 மணிக்கு கொடியேற்றத்துடன் தொடங்கியது. அருள் பணி. ஆன்ட்ரூ ஆரோக்கியசாமி இந்த ஆண்டு, சிறப்பு அழைப்பாளராக 'தூய ஆவியின் கொடைகள்' என்ற கருப்பொருளின் தலைப்பில் ஆன்மீக உரையாற்றினார்.

எளிய முறையில் அனைவரும் புரிந்து கொள்ளும் வகையில் சிறந்த உதாரணங் களுடன் விளக்கியது இறைநம்பிக்கை யாளர்களுக்கு சிறந்த அனுபவமாக அமைந்தது. கத்தோலிக்கர்கள் நாம் அனைவரும் வெறும் பக்தர்களாக இருந்துவிடாமல் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் உண்மை சீடர்களாக திகழ்ந்திட வேண்டும் என்று இறைநம் பிக்கையாளர்களுக்கு நினைவூட்டினார்.

ஒவ்வொரு நாளும் புனித அன்னம்மாள் நவநாள் செபத்துடன் திருப்பலி இனிதே கொண்டாடப்பட்டது. தமிழ், ஆங்கிலம், சீனம் மற்றும் மலாய் மொழிகளில் திருவிழா திருப்பலிகள் கொண்டாடப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது. பங்குத்தந்தை மோசஸ் இராயப்பன் அவர்களின் ஆலோசனையில் திருவிழா ஏற்பாடுகள் சிறப்பாக மேற்கொள்ளப் பட்டன. நாட்டின் பல பகுதிகளில் இருந்தும் குறிப்பாக மலாக்கா-ஜொகூர் மறைமாவட்ட இறைமக்கள் திரளாக கலந்துகொண்டு புனித அன்னம்மாளின் பரிவிரக்கத்திற்காக ஒன்று கூடினர்.

திருவிழா திருப்பலி நிறைவேறிய ஜூலை மாதம் 30ம் நாளன்று இறை ஆசிருடன் உணவும் வழங்கப்பட்டது.

-அருட்சகோதரி மெக்டலினா, மஜோடி




திருப்பீடத்தில் அருள்தந்தை மோசஸ் இராயப்பன், அருகில் அருள்தந்தை ஆன்ட்ரூ ஆரோக்கியசாமி

# என் திருஅவையை மீட்டெடுங்கள்

## போர்ட் கிள்ளான் புனித அன்னம்மாள் திருவிழா

**கிள்ளான்:** இங்கு, போர்ட் கிள்ளானில் உள்ள புனித அன்னா (அன்னம்மாள்) பங்கு இறைமக்கள், இதர இடங்களிலிருந்து வருகைத்தந்த திரளான கத்தோலிக்க மக்கள் ஜூலை 22 முதல் ஜூலை 31 வரை நடைபெற்ற நவநாள் திருப்பலிகளிலும் ஜூலை 29, 30 ஆகிய தினங்களில் கொண்டாடப்பட்ட விழா திருப்பலிகளிலும் சிறப்பாகக் கலந்து கொண்டனர்.



இந்த ஆண்டு கொண்டாட்டத்திற்கான கருப்பொருளான' என் திருஅவையை மீட்டெடுங்கள்' என்பதற்கு ஏற்ப அதிகமான இறைமக்கள் மீண்டுமாக, மிகுந்த உற்சாகத்துடனும், மகிழ்ச்சியுடனும் திருப்பலிகளில் பங்கேற்க கூடியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

திருஅவையின் கூட்டு ஒருங்கியக்கப் பயணமான 'சினோடல் ஆய்வின்' அடிப்படையில் இந்த கருப்பொருள் தேர்வுச் செய்யப்பட்டது. 'என் திருஅவையை மீட்டெடுங்கள்' என்று புனித பிரான்சிஸ் அசிசியாருக்கு இயேசு விடுத்த அழைப்பு இன்று நம்மில் எதிரொலிக்கிறது. ஏனெனில் இன்றைய திருஅவை அச்சம் மற்றும் பலதரப்பட்ட கவலைகளுடன் முன்னேற போராடுகிறது. இது திருஅவைக்கான சவால் மிக்க காலம். பெருந்தொற்றுக்குப் பிறகு மிகவும் தொய்வு கண்ட காலம். எனவே, பங்குத் திருஅவை, இறைமக்கள் மீண்டுமாக ஒன்றுகூடி மறைநூலுக்கு செவிசாய்த்து தியானிப்பதும், அழைக்கும் தந்தைக்கும், சந்திக்கும் மைந்தருக்கும் நம்மை செயல்படுத்தும் தூய ஆவியாருமான மூவொரு கடவுளில் இணைவதன் மூலம், திருஅவையை நாம் மீண்டும் மீட்டெடுக்க இயலும்.

ஜூலை 26, புனிதர்கள் சுவக்கீம், அன்னா விழா அன்று, காலை திருப்பலியை பேராயர் ஜூலியன் லியாவ் அவர்கள் தலைமைத்



தாங்கி கொண்டாடினார். அவரது மறையுரையில் இல்லங்களில் முதியோர்களை மதிப்பதிலும், அவர்களுக்குப் பணிவிடை செய்வதிலும், முதியோர்களுக்கான பராமரிப்புப் பணியில் அக்கறை காட்டுவதிலும் எப்பொழுதும் பின்வாங்கக்கூடாது என்று அறிவுறுத்தினார்.

பங்குத் திருவிழாவையொட்டி நோயாளிகளுக்கு சிறப்பு நோயிற்பூசுதல் திருச்சடங்கும் நடைபெற்றது. நிறைவாக, 'என் திருஅவையை மீட்டெடுங்கள்' எனும் கருப்பொருளுக்கிணங்க ஆக்கப்பூரவமான, செயல்படும் திருஅவையாக பயணிக்க வேண்டும் என்ற உணர்வும் எண்ணமும் பலராலும் உணரப்பட்டது.

*செய்தி தமிழாக்கம் – ஆர்.கே.*

# நற்கருணை ஆராதனையை மீண்டுமாக பங்குகளில் நிலைநிறுத்த வேண்டும்-திருத்தந்தை அறிவுறுத்து

"நான் இங்கே ஒரு கேள்வியை முன்வைக்கிறேன், ஆனால் ஒவ்வொருவரும் அதற்கு மனசாட்சியின்படி பதிலளிக்க வேண்டும். நான் எப்படி இறைவேண்டல் செய்கிறேன்? கிளி போல் — ப்ளா ப்ளா ப்ளா ப்ளா ப்ளா என்றா? அல்லது இறைவனிடம் பேசத் தெரியாததால் நற்கருணை பேழையின் முன் ஒரு குட்டித் தூக்கமா?



ஒவ்வொரு நாளும் ஆண்டவரிலும் அவருடைய வார்த்தையிலும் நம்பிக்கை வைப்பதற்கு, வெறும் வார்த்தைகள் போதாது", மாறாக "ஆழ்ந்த இறைவேண்டல் தேவை" என்று குறிப்பிட்ட பிறகு, சுமார் 1,100 பங்கேற்பாளர்களிடம், இன்றைய இறைமக்கள் நற்கருணையின் முன் ஆழ்ந்த ஆராதனை இறைவேண்டலை கைவிட்டதை அவர் சுட்டிக்காட்டினார்.

திருப்பலியில் ஒப்புக்கொடுக்கப்படும் அப்பத்தில், இயேசு ஆண்டவர் தனது உடலோடும், இரத்தத்தோடும், ஆன்மாவோடும், இறைத்தன்மையோடும் பிரசன்னமாகிறார் என்பது நமது நம்பிக்கை. எனவே, நற்கருணை ஆராதனை என்பது அப்பத்தில் பிரசன்னமாகி இருக்கும் இயேசு ஆண்டவரை ஆழ்ந்து ஆராதிப்பது ஆகும்.

# நன்றி திருப்பலி கொண்டாட்டம்

கர்தினாலாகத் தேர்வுப் பெற்ற ஆயர் செபஸ்தியன் பிரான்சிஸ் அவர்களுக்கு எதிர்வரும் செப்டம்பர் 30-ஆம் நாள் வத்திக்கான், புனித பேதுரு பசிலிக்காவில் 'கர்தினல்' நியமனம் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களால் வழங்கப்படவுள்ளது.

இதனை முன்னிட்டு, நம் நாட்டில் சிறப்பு 'நன்றி திருப்பலியை கர்தினல் செபஸ்தியன் பிரான்சிஸ் அவர்கள், வட்டார மலேசிய, சிங்கப்பூர் மற்றும் புருணை ஆயர் பேரவையின் சக ஆயர்களுடன் சிறப்பு திருப்பலியொன்றை கொண்டாட ஏற்பாடுகள் செய்யப்படுகிறது.

திகதி : 8 சனவரி, 2024

இடம்: புனித அன்னா மைனர் பசிலிக்கா, புக்கிட் மெர்தாஜாம், பினாங்கு.

நேரம்: மாலை 6.00



# கடவுளை நம்பினோர் கைவிடப்படார்!

இன்று பொதுக்காலத்தின் 19ஆம் ஞாயிறுவில் இணைந்துள்ளோம் இன்றைய முதல் வாசகத்திலே அஞ்சி அஞ்சி வாழ்வதிலும் சாவதே மேல் என்று மன்றாடுகிறார் இறைவாகினர் எலியாசு. ஆயினும் கடவுள் அவரைத் தேற்றி தென்றலின் சலசலப்பிலே, இதமான குரலில் கடவுளின் பிரசன்னத்தை உணர்கிறார். நம்முடைய வாழ்க்கையில்கூட அற்புதங்களையும் அருங்குறிகளையும் கண்டால் அன்றி நம்மில் பெரும்பாலும் நம்புவது கிடையாது.

இரண்டாம் வாசகத்திலே, புனித பவுல், "கிறிஸ்துவோ, எல்லாவற்றிற்கும் மேலான கடவுள்; என்றென்றும் போற்றுதற்கு உரியவர்" என புகழ்ந்து, வாழ்த்துகிறார். கடல் கொந்தளிப்பில் மருண்டு, ஐயங் கொண்டு தவிக்கும் சீடர் களைத் தேற்றி அவர்களது நம்பிக்கையை வளர்த்திடும் நிகழ்வுதான் இன்றைய நற்செய்தியின் மைய கருத்தாக அமைந்திருக்கிறது. கடல் கொந்தலிக்க, காற்று பலமாக வீச, இந்த இரண்டு இயற்கைகளும் சேர்ந்து படகு அலைக்கழிக்கப்படுகிறது. அப்பொழுது தண்ணீர் மீது நடந்து வரும் உருவத்தைப் பார்த்து "அய்யோ, பேய்" என அஞ்சுகின்றனர் சீடர்கள்.

இயேசுவோ, "துணிவோடு இருங்கள், நான்தான் அஞ்சாதீர்கள்" என்றார். உடனே சிறுபிள்ளைத்தனமாக பேதுரு, "ஆண்டவரே நீர்தாம் என்றால், நானும் கடல்மீது நடந்து உம்மிடம் வர ஆணையிடும்" என்றார். பேதுருவும் படகில் இருந்து இறங்கி, இயேசுவை நோக்கிக் கடல்மீது நடந்து சென்றார். அப்பொழுது பெருங்காற்று வீசியதைக் கண்டு, அஞ்சி மூழ்கத் தொடங்குகிறார். "ஆண்டவரே, என்னைக் காப்பாற்றும்" என பேதுரு கத்த உடனே இயேசு கையை நீட்டி அவரைப் பிடித்து "நம்பிக்கை குன்றியவனே, ஏன் ஐயம் கொண்டாய்?" என கடிந்து கொள்கிறார். புயலும் கடல் கொந்தளிப்பும் அடங்கியது. படகில் இருந்த மற்ற யாவரும் "உண்மையாகவே நீர் இறைமகன்" என்றனர். இது நடந்தது விடியற்காலையில்.

வீரமுள்ள மனிதர் கூட இருட்டில் நடக்கும் பொழுது வித்தியாசமான ஒலியை கேட்டால் கலங்கி விடுவது இயல்பு தான். மாறாக ஒரு குழந்தை, அதே கம்மிருட்டில் வீரமுள்ள தன் தந்தையுடன் செல்லும் போது எந்த ஒரு சப்தம் எழுந்தாலும் அச்சம் கொள்வதில்லை. காரணம் அந்த குழந்தைக்கு தன் தகப்பனார் இருக்கும் பொழுது ஏன் பயப்பட வேண்டும் எனும் அசைக்க முடியாத மன வலிமைதான்.

நம்முடைய அன்றாட வாழ்க்கையில் கூட, பல சந்தர்ப்பங்களில் இம்மாதிரியான நிகழ்வுகள் நடந்திருக்கலாம். அதாவது, கடலை கண்டு அஞ்சியிருக்கலாம். அதற்காக தற்கொலை நிலைக்கு சென்றிருக்கலாம். அப்படியே தற்கொலைதான் அதற்கு தீர்வு என்றால், அது சரியான தீர்வாகுமா? தேர்விலே தோல்வி என்று வைத்துக்கொள்வோம், வீட்டை விட்டு ஓடிவிடுவது அது பரிகாரம் ஆகி விட முடியுமா?

ஆக, நமக்கு வாழ்வில் சிக்கல்கள் தோன்றுகின்றது உண்மைதான். விசுவாசம் தளர்ச்சி காண்கிறது, விசுவாசப் பயணத்தில் ஏற்படும் பற்பல தளர்ச்சிகளை நீக்கி வளர்ச்சி அடைய வேண்டியதும் நம் ஆண்டவரை ஏற்றுக் கொண்டு அவரை நோக்கி குரல் கொடுப்பதும் தவிர்க்க முடியாதவை.

*ஆ.வி.டேவிட், குளுவாங்*

**ஆண்டின் பொதுக்காலம் 19ம்- ஞாயிறு**

| | |
|---|---|
| முதல் வாசகம் | 1 அர 19: 9a, 11-13a |
| திபா | 85: 8ab,9. 10-11. 12-13 |
| 2 வாசகம் | உரோ 9: 1-5 |
| நற்செய்தி | மத் 14: 22-33 |

**ஞாயிறு வாசகம் ஆண்டு 1**

**வாரநாள் முதல் வாசகம் -ஆண்டு 1**

**திருப்புகழ் மாலை- வாரம் 2**